## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 11, 2017

**1. எந்த மத்திய அமைச்சர், கழிவுப்பொருட்களில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் (waste-to-power plant) இந்தியாவின் மிகப்பெரிய மின்நிலையத்தை புதுதில்லியில் திறந்து வைத்தார் ?**

A. ராஜ்நாத் சிங்
B. நரேந்திர மோடி
C. வெங்கையா நாயுடு
D. அருண் ஜெட்லி

**விடை: C. வெங்கையா நாயுடு**

மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு, சமீபத்தில் புது தில்லியின் நரேலா-பவானவில் திட கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும்(waste-to-power plant) இந்தியாவின் மிகப்பெரிய மின்நிலையத்தை திறந்து வைத்தார். 24 மெகா வாட் கொண்ட இந்த ஆலையானது, தினசரி 1,300 மெட்ரிக் டன் கழிவுப்பொருட்களை அகற்றுவது மட்டுமின்றி, உரம் மற்றும் ஆற்றலை உற்பத்தி செய்கிறது. திட்டமானது ரூ.650 கோடி செலவில் கட்டப்பட்டது மற்றும் நரேலா-பவானவில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் பரந்த விரிந்துள்ளது, 24 மெகாவாட் ஆற்றலை உற்பத்தி செய்ய ஒவ்வொரு நாளும் 2,000 மெட்ரிக் டன் திட கழிவுகளை பயன்படுத்தும். இதில் தயாரிக்கப்படும் மின்சாரம், மின்சார சீராக்கிகள்(Electricity regulator) நிர்ணயிக்கும் விலைக்கு விநியோக நிறுவனங்களுக்கு விற்கப்பட்டு விடும்.

**2. எந்த நாடு, "ஹோர்முஸ் 2" எனும் நீண்ட தொலைவிற்கு பாயும் கடற்படை ஸ்ட்ரைக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது ?**

A. ஈரான்
B. இஸ்ரேல்
C. பாகிஸ்தான்
D. இந்தியா

**விடை: A. ஈரான்**

ஈரான், கடலில் நகரும் இலக்குகளை உயர் துல்லியத்துடன் தாக்கும் மற்றும் சுமார் 300 கிலோமீட்டர் (186 மைல்) வரை பாயும் திறன் கொண்ட "ஹோர்முஸ் 2" எனும் நீண்ட தொலைவிற்கு பாயும் கடற்படை ஸ்ட்ரைக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது

**3. எந்த மாநில அரசு, மன உளைச்சலில் இருக்கும் பெண்களுக்காக(distressed women) "181" என்ற 24x7 கட்டணமில்லா இலவச ஹெல்ப்லைன் எண்ணை தொடங்கியுள்ளது ?**

A. அசாம்
B. ஒடிசா
C. மேற்கு வங்காளம்
D. ஹரியானா

**விடை: B. ஒடிசா**

ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், சமீபத்தில் சர்வதேச மகளிர் தினத்தன்று மாநிலத்தின் அனைத்து 30 மாவட்டங்களிலும் மன உளைச்சலில் உள்ள பெண்களுக்காக "181" என்ற 24x7 கட்டணமில்லா இலவச ஹெல்ப்லைன் எண்ணை தொடங்கியுள்ளார். இந்த ஹெல்ப்லைன் வசதியானது, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆலோசனை, மருத்துவ, சட்ட உதவி வழங்க போலீசில் புகார் அளித்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு விரைவான பதிலை பெற வழிவகை செய்யும்.

**4. இந்திய ரிசர்வ் வங்கியின்(RBI) புதிய துணை கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. மனோஜ் பிங்கு
B. திலிப் எஸ் சங்வி
C. சந்திராகர் பாரதி
D. பி.பி. கனுன்கோ

**விடை: D. பி.பி. கனுன்கோ**

பி.பி. கனுன்கோ, 3 ஆண்டுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய துணை கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார், இவர் ஆர். காந்தியின் இடத்தை நிரப்புகிறார். நியமனங்கள் குழு அமைச்சரவை (Appointments Committee of Cabinet), இவரது பதவி நியமனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதாவது, ஏப்ரல் 3, 2017 அல்லது அதற்கு பிறகு அல்லது அடுத்த உத்தரவு வந்தவுடன் இவர் பதவி ஏற்கலாம். இவற்றில் எது முதலில் வருகிறதோ, அது கணக்கில் கொள்ளப்படும்.

**5. இந்தியா ஆப்ரிக்கா திட்ட கூட்டு(India Africa Project Partnership ) பற்றிய 12-வது CII EXIM வங்கி மாநாடு, எந்த நகரத்தில் நடைபெற்றது ?**

A. புது தில்லி
B. சென்னை
C. புனே
D. கொல்கத்தா

**விடை: A. புது தில்லி**

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, இந்தியா ஆப்ரிக்கா திட்ட கூட்டு(India Africa Project Partnership ) பற்றிய 12-வது CII EXIM வங்கி மாநாட்டை மார்ச் 9, 2017 அன்று புது தில்லியில் தொடங்கி வைத்தார். இது, ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து உயர் அதிகாரிகள் மற்றும் வணிகக் குழுக்கள் பங்கு பெற்றதற்கு சான்றாக விளங்கும் ஒரு ஆண்டு நிகழ்வாகும். மாநாட்டின் நோக்கம் வர்த்தகம், பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, நிதி மற்றும் கன்சல்டன்சி, சுரங்க தொழில் மற்றும் கனிமங்கள், விவசாயம் மற்றும் வேளாண் பதப்படுத்துதல், மின்சாரம் & மாற்று எரிசக்தி, ஹெல்த்கேர், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், மனித மூலதன அபிவிருத்தி மற்றும் மக்களுக்கும் மக்களுக்குமான(People-to-People Contacts) தொடர்புகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை விவாதிப்பதாகும். இந்த 2-நாள் மாநாட்டை, வெளிவிவகார அமைச்சகம் மற்றும் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்துடன் இணைந்து சிஐஐ-எக்ஸிம் வங்கி ஏற்பாடு செய்தது.

**6. நேபாளத்தின் புதிய இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. அனிதா கார்வால்
B. யூ வெங்கடேஸ்வர்லு
C. மன்ஜீவ் சிங் பூரி
D. ரூபி ஸ்ரீவஸ்தவா

**விடை: C. மன்ஜீவ் சிங் பூரி**

1982 தொகுதி IFS அதிகாரி மன்ஜீவ் சிங் பூரி, நேபாளத்தின் புதிய இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ரஞ்சித் ரேவின் இடத்தை நிரப்புகிறார். பூரி, தற்போது ஐரோப்பிய ஒன்றியம், பெல்ஜியம் மற்றும் லக்ஸம்பர்க்கின் இந்தியத் தூதராக உள்ளார்.

**7. "'The Travelling Belly: Eating Through India's By-Lanes" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. மந்தார் சுக்தான்கர்
B. சரனேஷ் கொய்லா
C. அனுாதி விஷால்
D. கல்யாண் கர்மாகர்

**விடை: D. கல்யாண் கர்மாகர்**

"The Travelling Belly: Eating Through India's By-Lanes" என்ற புத்தகத்தை கல்யாண் கர்மாகர் எழுதியுள்ளார். ஆசிரியர், வெவ்வேறு பகுதிகளின் வழக்கமான சிற்றுண்டிகளை உயர்த்தி காட்டுகிறார், குறிப்பிட்ட பகுதியில் உள்ள பிரபலமான சமையல் மற்றும் உள்ளூர் மக்கள் விரும்பி உண்ணும் சுவையான உணவுகளின் மீதான உட்பார்வையை கொடுக்கிறார்.

**8. லேசர் இன்டர்ஃபெரோமீட்டர் ஈர்ப்பு அலை கவனிப்பு மையத்தின் (LIGO) இணை நிறுவனர் ரொனால்ட் ட்ரெவெர்(Ronald Drever), சமீபத்தில் காலமானார். இவர் எந்த நாட்டை சேர்ந்தவர் ?**

A. ஐக்கிய ராஜ்ஜியம்
B. அமெரிக்கா
C. ஜெர்மனி

D. பிரான்ஸ்

**விடை: A. ஐக்கிய ராஜ்ஜியம்**

ஈர்ப்பு அலைகள் துறையில் ஒரு முன்னோடியான பேராசிரியர் ரொனால்ட் ட்ரெவெர் (85), சமீபத்தில் ஐக்கிய ராஜ்ஜியத்தின் (இங்கிலாந்து) ஸ்காட்லாந்தில் காலமானார். லேசர் இன்டர்ஃபெரோமீட்டர் ஈர்ப்பு அலை கவனிப்பு மையத்தின் (LIGO) இணை நிறுவனர்களில் இவரும் ஒருவர். கருந்துளை ஜோடிகளை இணைக்கும் போது ஈர்ப்பு அலைகள் உமிழப்படுவதை LIGO துப்பறிவாளர்கள் கண்டுணர்ந்தனர்.

**9. நோபல் பரிசு பெற்ற ஜார்ஜ் ஏ. ஓலா(George A. Olah) சமீபத்தில் காலமானார். இவர் எந்த துறையில் நோபல் பரிசு வென்றார் ?**

A. இயற்பியல்
B. பொருளியல்
C. வேதியியல்
D. மருத்துவம்

**விடை: C. வேதியியல்**

வேதியியலில் நோபல் பரிசு வென்ற பேராசிரியர் ஜார்ஜ் ஏ. ஓலா (89), சமீபத்தில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் காலமானார். கார்போகேஷன்ஸ் என அழைக்கப்படும் நிலையற்ற கார்பன் மூலக்கூறுகளில் தனது முன்மாதிரி ஆராய்ச்சிக்காக, 1994 ஆம் ஆண்டு இவர் நோபல் பரிசு பெற்றார்.

**10. எந்த மாநில அரசு, வேலை பார்க்க விழைவோர்க்காக(Job aspirants) “Mera Hunar” எனும் மொபைல் பயன்பாட்டை அறிமுகம் செய்துள்ளது ?**

A. ஆந்திரப் பிரதேசம்
B. அசாம்
C. இமாசலப் பிரதேசம்
D. கேரளா

**விடை: c. இமாசலப் பிரதேசம்**

இமாசலப் பிரதேச அரசு, சமீபத்தில் வேலை பார்க்க விழைவோர்க்காக(Job aspirants) “Mera Hunar HP” எனும் இணையதளம் மற்றும் மொபைல் பயன்பாட்டை அறிமுகம் செய்துள்ளது. இந்தியாவில் இது முதல்-வகையான(first-of- its-kind application) பயன்பாடு ஆகும். திறமையான அல்லது அரை திறமையான நபர்கள் தங்கள் வசதிக்கேற்றாற்போல் பிளம்பர், கார்பெண்டர், மெக்கானிக், பாதுகாவலர்கள், ஓட்டுநர்கள், சுற்றுலா பயணி வழிகாட்டிகள் முதலிய பல்வேறு வேலைகளுக்கு இந்த வலை அடிப்படையிலான Mera Hunar தளத்தில் விண்ணப்பிக்க முடியும். இந்த தளமானது, ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய இரு மொழிகளில் இருக்கும். வேலை தேடுபவர்களின் விண்ணப்பங்களில் அவர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் வேலை தொடர்பான இதர தகவல்கள் இருப்பதால், வேலை தேடிக்கொண்டிருக்கிறவர்களை அவர்களின் எதிர்கால முதலாளிகளுடன் இந்த தளம் நேரடியாக இணைக்கும். தங்கள் பகுதியில் தினசரி வேலைகளை தேடுபவர்கள் இதனால் பயனடைவார்கள்.